Arimaa Nokku

# அரிமா நோக்கு

15: 4 சனவரி 2022

ISSN 2320-4842



ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

அரிமா நோக்கு
15 : 4 சனவரி 2022

நோபல் பரிசு 2021
- வ. ஜெயதேவன் 03

நூலறி புலவன் நுண்ணிதின் கயிறிட்டு வகுத்த நெறி
- ஆ. மணவழகன் 05

கதைப்பாடல்களில் அம்மானை
- ச. ராஜேஸ்வரி 13

தொல்காப்பியம்: சொல்லதிகாரம் உரைத்திறன்
- வீ. வினோதா 17

சங்க காலக் களவர்கள்
- அ. ஜெயக்குமார் 20

வட்டார வழக்கு அகராதிகள்
- ஜா. கீதா 24

பெண்ணியத்தைச் செதுக்கிய சமூகச் சிற்பிகள் - பாரதியும் பெரியாரும்
- சு. சுசா 28

திருக்குறளில் மருத்துவக் கூறுகள்
- ப. சு. செல்வமீனா 38

**Scientific Temper and Academic Achievement in Physics among Higher Secondary School Students with respect to their Type of Institutions**
- *R. Selvendiran, A. Tholappan & K. Anandan* 42

சதக இலக்கிய யாப்பு வடிவங்கள்
- கு. முதற்பாவலர் 46

**Emotional Intelligence of B. Ed Trainees of Distance Education with respect to their Demographic Variables**
- *R. Saranya & A. Tholappan* 57

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## கவிதை, கவிதையியல் களஞ்சியம்

ஆங்கிலத்தில் கவிதை, கவிதையியல் களஞ்சியம் எனும் பயன்மிக்க, நூல் அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தால் 1965ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் விரிவாக்கம் 1974இல் வெளிவந்தது. அதன் முன்னுரை, கவிதைத் துறையில் செய்யப்பட்ட முதல் முயற்சி என்று அதனைக் குறிப்பிடுகிறது.

கவிதை குறித்ததான வரலாறு, கோட்பாடு, செய்நுட்பம், திறனாய்வு ஆகிய கோணங்களில் இயங்குகிறது இக் களஞ்சியம். தொன்மை சான்ற கவிதைகளிலிருந்து இன்றைய கவிதைவரை பார்வைக்கு உட்படுத்தியுள்ளது. உலகின் பல நாடுகளில் பல மொழிகளில் எழுதப்பட்டுள்ள கவிதைகள் பற்றியும் பேசும் இந்த நூலில் இந்தியக் கவிதைகள் என்று வரும் பகுதியில் தமிழ்க் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

தனிப்பட்ட கவிஞர், தனிப்பட்ட கவிதைகள், விளக்கங்கள் என்பன, நூலின் அளவு கருதியும் அமைப்புக் கருதியும் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயிரம் பதிவுகள் உள்ள இத் தொகுப்பில், பதிவு ஒவ்வொன்றும் இருபது முதல் இருபதாயிரம் சொற்கள் வரையறையில். அமைந்துள்ளன. நாடு, மொழி என்னும் கோணத்தில் மட்டுமன்றிப் பொருண்மை அடிப்படையிலான சிறப்புப் பதிவுகளும் உள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமோ, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமோ இப்படி ஒரு கவிதை, கவிதையியல் கலைக்களஞ்சியத்தை உருவாக்கும் முயற்சியை மேற்கொள்ளலாம். உலக அளவில் கவிதைகள் பிறந்த விதம், வளர்ந்த விதம் எல்லாம் தெரிந்துகொள்ள மட்டுமன்றி நம் கவிதைகளை உரிய முறையில் ஆராயவும் மேம்படுத்தவும் இக் களஞ்சியம் பெரிதும் உதவும்.

இப்பெரிய திட்டத்திற்கு முன்னோட்டமாக, இவ்வுலகக் கவிதை. கவிதையியல் களஞ்சிய ஆக்கமுறையைப்